
# சுட்டி

மாத இதழ் டிச.'88 80 காசு



அரியணையில் அமர
ஆயிரங்கோடி ரூபாயை
அநாயசமாக
ஊதித் தள்ளுகிறார்
மூப்பனார்!
காசு கரியாகுமா?
ஓட்டாகுமா?

94

FREE E - BOOKS , www.thamizham.net.,

இரண்டாம் பரிசுபெறும் நாடகம்

# தேவ் காரணம்

**பி.என்.ராஜன்**

## காட்சி - 1

**உலகவங்கி:** சரி நீங்க கேட்ட உதவித் தொகையைத் தர்றோம். அதுக்கு வட்டி எட்டு சதம் கொடுத்தாப் போதும்!

**அரசு:** சரி கொடுங்க நம்ம தேச வங்கிகளுக்குக் கேட்ட கடன் தொகையைத் தர்றோம் குறைஞ்ச வட்டி பத்து சதம் கொடுத்தாப் போதும்!

**வங்கிகள்:** சரி கொடுங்க! நம்ம தேச தொழிலதிபர்களுக்குக் கேட்ட கடன் தொகையைத் தர்றோம்.... குறைஞ்ச வட்டி 14% கொடுத்தாப்போதும்!

**தொழிலதிபர்:** சரி கொடுங்க நம்ம தேச வியாபாரி களுக்குக் கேட்ட கடன் தொகையை தர்றோம் குறைஞ்ச வட்டி கொடுத்தாப் போதும்!

**வியாபாரி:** சரி கொடுங்க நம்ம சின்ன வியாபாரிகளுக்குக் கேட்ட கடன் தொகையை தர்றோம் குறைஞ்ச வட்டி கொடுத்தாப் போதும்!

**சிறுவியாபாரி:** சரி கொடுங்க நம்ப வாடிக்கை காரங்களுக்கு கேட்ட கடன் தொகையை தர்றோம் குறைஞ்ச கந்து வட்டி அம்பதுக்கு அம்பது கொடுத்தாப் போதும்!

**சராசரி மனிதன்:** எனக்கு பசிக்குதுய்யா என்ன அநியாயம் இது ஒரு ரூபாய்க்கு ஒரு ரூபா வட்டியா? சரி கொடுங்க!

**உலக வங்கி:** என்ன புதுசா கடன் வேணுமா? முதல்லே வாங்கின கடனைத் திருப்பிக்கட்டு அதுக்கு வட்டியாவது கொடு

## காட்சி - 2

**அரசு வங்கி, தொழிலதிபர், வியாபாரி, சிறுவியாபாரி:** வாங்கின கடன் எங்கே? வட்டி கட்டு! வட்டியைக் கட்டு!


*சராசரி மனிதன் ஊமையாய் நிற்கிறான்*

**பாரதியார் பாடல் ஒலிக்கிறது:** "கஞ்சி குடிப்பதற் கிலார் அதன் காரணங்கள் இவை என்னும் அறிவுமிலார்......"

- திரை -

FREE E - BOOKS , www.thamizham.net.,

# குருவி முதுகில் பனங்காய்!



° படிப்பு-
மூளையை வளர்க்கவா?
முதுகெலும்பை முறிக்கவா?
° படிப்பதற்கு அனுப்பினால்
சுமப்பதற்குப் பழக்குவதா?



FREE E - BOOKS , www.thamizham.net.,

# எக்ஸ்ரே - உயிருக்கு ஆபத்தா?

அணுக்கதிர் வீச்சு அபாயம் என்றால் ஜப்பானின் இரோசிமா, நாகசாகியும், சோவியத்தின் செர்னோபிலும் மட்டும் நினைவுக்கு வருகின்றன. இதே மாதிரியான ஆபத்துக்கள் நாம் சாதாரணமாக எடுக்கும் எக்ஸ்ரேயிலும் உண்டு என்பது பலருக்குத் தெரிவதில்லை.

நம் நாட்டின் 30,000 எக்ஸ்ரே நிலையங்களில் 9 கோடி பேர்கள் ஆண்டுக்கு எக்ஸ் கதிருக்கு உட்படுத்தப் படுகிறார்கள். இதில் 5 கோடி பேர்கள் 30 அல்லது அதற்குட்பட்ட வயதினர். இவர்களில் 597 பேருக்குப் புற்று நோயும் 3564 பேருக்கும் பரம்பரைக் கோளாறுகளும் வருவது உறுதி.

1983இல் அரசு இது தொடர்பாக அமைத்த குழு வெளியிட்ட அறிக்கை கூறுகிறது: 95% எக்ஸ்ரே நிலையங்கள் சரியான நிலையில் செயல்படவில்லை. இவற்றின் பலவற்றில் மிகுதியாக கதிர் வீச்சு வெளிப்படுகிறது. பாதுகாப்பு சாதனங்கள் போதிய அளவு இல்லை. வணிக நோக்கோடு மட்டுமே இவை செயல்படுகின்றன.

தடித்த சுவர்கள், ஈய உட்தகடு கொண்ட கதவுகள் சன்னல்கள். இவை அமைக்கப்படாவிட்டால், நோயாளியும், எக்ஸ்ரே இயக்குநரும் மட்டுமின்றி வெளியே உள்ள பொது மக்களும் பாதிக்கப்படுவர். பொதுமக்கள் பாதுகாப்பிற்குச் சில யோசனைகள் வருமாறு:-

1. மிகவும் தேவையிருந்தாலொழிய எக்ஸ்ரே எடுக்காதீர்கள். டாக்டரே எடுக்கச் சொன்னாலும், இதற்கு வேறு மாற்று உள்ளதா எனக்கேளுங்கள்.

2. கர்ப்பிணிப் பெண்கள் மிகமிக அவசியமாக இருந்தாலொழிய எக்ஸ்ரே எடுப்பது ஆபத்தானது. பெண்களின் வயிற்றுப்பகுதியை எக்ஸ்ரே எடுக்கும் அவசியம் வந்தால் மாதவிடாய்க்கு 10 நாளுக்கு முன்பு எடுக்க வேண்டும். ஆண்களின் வயிற்றுப் பகுதியை எக்ஸ்ரே எடுக்க நேர்ந்தால், ஆண்குறிக்கு மேல் ஈயத்தகடு வைக்கப்படல் வேண்டும்.

3. மிகவும் நம்பிக்கையான இடங்களில் மட்டும் எக்ஸ்ரே எடுங்கள். எக்ஸ்ரே எடுக்கும் ரேடியோகிராபர், எக்ஸ்ரேயின் கதிர் வீச்சு அளவைக் கணிக்கும் செவ்வக பிலிம் வில்லை வைத்திருக்கிறாரா என்று கவனியுங்கள். அப்படி இல்லையென்றால் அவர் தன் நலனில் மட்டுமின்றி, உங்கள் நலனிலும் அக்கறையில்லாதவர் என்று புரிந்துகொண்டு ஒதுங்குங்கள்.

4. எக்ஸ்ரே நிலையத்தில் கதிர்வீச்சு பாதுகாப்பு அதிகாரி ஒருவர் இருந்தாக வேண்டும். அணுசக்தி சட்டம் 1962 இன்படி இது கட்டாயம். அப்படி இல்லையெனில் உடனே புகார் கொடுங்கள்.


எக்ஸ்ரே பற்றிய மேலும் விவரம் அறிய, வேறு ஐயங்களைத் தெரிவிக்க எழுதுங்கள்:- Lokayan, 13 Alipur Road, DELHI-110 054

– சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

தென்கிழக்குஆசியா

# சிங்கப்பூர்



மலேசிய தீபகற்பத்தின் காலடியில் உள்ள சுமார் 60 தீவுகள் சேர்ந்த வைரவடிவ நாடு சிங்கப்பூர். இது நம் சென்னையைவிட சுமார் 5 மடங்கு பரப்பளவும், ஆனால் சென்னையில் பாதி அளவு மக்கட் தொகையையும் கொண்ட நகர நாடாகும்.

இங்கு இயற்கை வளம் குறைவு. நீருக்குக்கூட மலேசிய நாட்டையே சார்ந்துள்ள நிலை. மண் வளமில்லாவிட்டாலும், இதன் இருப்பிடமே இதனைத் தென்கிழக்கு ஆசியாவில் புருனைக்கு அடுத்த பணக்கார மக்கள் வாழும் நாடாக உயர்த்தியுள்ளது. (தனி நபர் வருவாய் ஆண்டுக்கு ரு 95, 000).

இந்துமாக்கடல், தென்சீனக்கடல், பசுபிக் கடல் இவற்றின் நடுவில்,தென்கிழக்கு ஆசியாவின் நுழைவாயிலில் சிங்கப்பூரின் ஆழமான 'கெப்பல்' துறைமுகம் அமைந்தது இதன் பலம். இங்கு 10 நிமிடத்திற்கு ஒரு முறை ஒரு கப்பல் நுழையும் அல்லது வெளியேறும். ஒரு நாளைக்கு 600 கப்பல்கள் நிற்கும். அதே போல 'சாங்கி' விமான நிலையமும் எண்ணற்ற விமானங்களை சில நிமிடங்குகளுக்கு ஒரு முறை ஏற்றி இறக்குகிறது. உலகத்தின் மிகப்பெரிய வணிக சந்தையாக விளங்கும் பூகோள வசதியே சிங்கப்பூரின் கவர்ச்சிக்கு காரணம்.

இன்றைய சிங்கப்பூரை 1819 இல் கிழக்கிந்திய கம்பெனியை சேர்ந்த சர் ஸ்டாம் போர்டு ராபில்ஸ் உருவாக்கினார். துமாசிக் (கடற்கரைப்பட்டினம்) என்பது இதன் பழம் பெயர். சிங்கப்பூர் என்ற பெயரை வழங்கியது தென்னிந்தியர்கள்தான். தென்னிந்தியர்களின் சிறீ விஜயப் பேரரசின் வழித்தோன்றலான உத்தமன் என்ற இளவரசன் இத்தீவைத் தளதாக்கி சிங்கபுரம் எனப் பெயரிட்டான்.

இன்றுள்ள மக்களில் 70% சீனர் 15% மலாய்காரர், 7% இந்தியர். சீன, மலாய், ஆங்கிலம் மாதிரி தமிழும் இங்கு ஆட்சிமொழியாக அரியணையில் அமர்ந்துள்ளது. தாய்தமிழகம் போல இன்றி, இங்கு தமிழ்மொழி, தமிழர்களுக்குக் கட்டாயப் பாடமாகப் பள்ளியில் அரசால்வற்புறுத்தப்பட்டுள்ளது.

1965 இல் மலேசியாவிலிருந்து தனிநாடாகப்பிரிந்த சிங்கப்பூரின் 33 ஆண்டு கால ஆட்சியில் மக்கள் செயல் கட்சியே ஆட்சியில் அமர்ந்துள்ளது. லீகுவான்யூ தான் ஒரே பிரதமர். இவரது தலைமையில் வேலையின்மை, கல்வியின்மை, வீடின்மை அறவே ஒழிக்கப்பட்டுள்ளன. 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு இராணுவச் சேவை கட்டாயம். 5 இல் 4 வர் அரசு வீட்டு வசதி வாரிய பல அடுக்கு வீடுகளில் வாழ்கின்றனர். திரும்பும் பக்கமெல்லாம் கான்கிரீட் காடுகள் தாம்.

தெருக்களில் குப்பை போட்டால் மட்டுமில்லை, தியேட்டரில் புகைத்தாலோ, தண்ணீரை வீணடித்தாலோ, கண்ட இடத்தில் எச்சில் துப்பினாலோ சாலையில் செடிகளைப் பிடுங்கினாலோ, பேருந்து இருக்கைகளை நாசப்படுத்தினாலோ கடும் அபராதம் உண்டு.

சிங்கப்பூரின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்தாலும் நிகழ்காலம் வளமானது; உலகின் கவனத்திற்குரியது!

–உலகப்பன்

(அடுத்து:புருனை)

FREE E - BOOKS , www.thamizham.net:,

# சண்டைக் காட்சிகள்

வீட்டில் பிள்ளைகள் போடும் சண்டை யிலிருந்து, வெளியே உலக நாடுகள் போடும் சண்டை வரை, எல்லாவற்றையும் நாம் வேண்டாமென்கிறோம். ஆனால் திரைப் படங்களில் மட்டும் சண்டைக் காட்சிகள் வேண்டும் என்று விரும்புகிறார்கள் விநியோகஸ்தர்கள். ரசிகர்களில் பலர் சண்டைப் பிரியர்களாக இருப்பதே அதன் காரணம்.

இன்றையத் திரைப்படங்களில் இடம் பெறும் சண்டைக் காட்சிகள் எவ்வாறுள்ளன? சாகசங்கள் மிகுந்து, ஆவேசம் குறைந்து காணப்படுகின்றன. சண்டையின் பின்புலமே கோபமும், ஆவேசமும் தான். அந்தக் கோபத்தை நம்மால் காணமுடியவில்லை. மாறாக,கதாநாயகர்கள் விதவிதமான சர்க்கஸ் காட்சிகளை , சண்டைக்காட்சிகளாச் செய்கின்றனர். பறந்து பறந்து அடிப்பது, பாடிக் கொண்டே சண்டை போடுவது, கொலை வெறி ஆயுதங்களோடு நிற்கும் பத்துப் பனி ரெண்டு பேரை ஒருவரே அநாயசமாக வீழ்த்துவது, ஓடும் ரயிலின் மேலே ஓடியபடி சண்டை போடுவது, இப்படிப் பல்வேறு விதமான செயற்கைத்தனம் பொருந்திய காட்சிகளே நிரம்ப இடம் பெறுகின்றன. 'நாயகன்' படத்தில், ஒரு போலீஸ்காரரும், படத்தின் கதாநாயகனும் போடும் ஆக்ரோஷமான சண்டைக் காட்சிகள் மாதிரி ஒன்றிரண்டு விதிவிலக்காக உள்ளன.

பழைய படங்களில் கத்திச் சண்டை, சிலம்புச் சண்டை முதலான சண்டைகளும், அவற்றை முறையாகப் பயின்ற நடிகர்களும் இருந்தனர். இன்றைய நிலையில் அத்தகைய சண்டைகளும் கதைகளில் இடம் பெற முடியாது; முறையாகப் பயின்ற நடிகர்களும் இல்லை.

ஒவ்வொரு சண்டைக் காட்சிக்கும் நம் திரைப் படங்கள் எடுத்துக் கொள்ளும் நேரமும் மிக அதிகமாகும். வெளிநாட்டுப் படங்களில் ஓரிரண்டு அடிகளில் எதிரி வீழ்ந்து விடுவான். அந்தக் குறுகிய நேரத்தில் அவர்களால் நம்மிடையே ஒரு திகிலையும் ஏற்படுத்த முடிகிறது. ஆனால்,இங்கோ எந்தத் திகில் உணர்ச்சியும் இல்லாமல் இருவரும் நெடுநேரம் சண்டை போட்டுக் கொண்டே இருப்பார்கள்.

மோசமான படங்களோடு ரசிகர்கள் சண்டை போடாமல் இருக்கும் வரை, நிலைமை இப்படித்தான் இருக்கும்.

(அடுத்து: ஒளிப்பதிவு)

– வசந்தா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஏ.எஸ். பிரகாசம்

ஏ.எஸ். பிரகாசம், திரைப்படத்துறையைச் சார்ந்தவர் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர், சென்னை, பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியராக்வும் உள்ளார் என்பது யாருக்கும் தெரியாது அந்தக் கல்லூரி மாணவர்கள் உட்பட! கல்லூரிக்கும் வகுப்புகளுக்கும் போகவே போகாமல், இந்த ரகசியத்தை அவர் தொடர்ந்து காப்பாற்றி வருகிறார்.

ஆனால் விழா மேடைகளிலும், பத்திரிகைகளிலும் அவர் பேச்சு வேறு மாதிரி இருக்கிறது. 'பிரசிடெண்ட்' ஹோட்டலில் நடந்த ஒரு விழாவில், "இப்போதுதான் மூன்று மணி நேரம் கல்லூரியில் வகுப்பு எடுத்துவிட்டு வருகிறேன்" என்று தன் பேச்சைத் தொடங்கினாராம். அண்மையில் 'தாய்' - இதழுக்குக் கொடுத்துள்ள பேட்டியில் கல்லூரி முடிந்த பின் மாலை நேரங்களிலும், கோடை விடுமுறையிலும்தான் படப்பிடிப்பை வைத்துக் கொள்கிறேன்' என்று 'சத்திய' வாக்குமூலம் கொடுத்துள்ளார். சில வேளைகளில் பொய் சொல்லலாம்தான்; ஆனால் பொய் மட்டும் சொல்வதையே கொள்கையாக வைத்துக் கொள்ளக் கூடாது.



திரைப்படத்துறை, கல்வித்துறை இரண்டிலுமே பிரச்சனைக்குரிய இரு சங்கங்களில் இவர் பங்கேற்றுள்ளார். சினிமாவில், ஜீவி யின் கையாளாகச் செயல்படும் இவர், கல்வித்துறையில் ஏற்கனவே இருக்கும் கல்லூரி ஆசிரியர் சங்கத்தை(AUT)ப் பிளவுபடுத்தும் வகையில் 'டக்டோ' என்று ஒரு புதிய சங்கத்தைத் தொடங்கியுள்ளார். கல்லூரிக்கே வராமல் வருகைப் பதிவேட்டில் மட்டும் கையெழுத்துப் போடும் இவருக்குப் புதிய சங்கத்தை மட்டும் கவனிக்க நேரம் இருக்குமா என்ன? பழைய சங்கத் தலைவர்களிடம் தன்னை விலைபோய் விட்டதாகக் கூறுபவன்தான் 'விலை மகன்' என்று ' பண்போடு' பேசியதோடு, நாற்காலியை எடுத்து அடிக்க முற்படும் அளவுக்கு 'கண்ணியமாக' நடந்து கொண்டுள்ளார்.

கல்விநிலையத்தில் பணியாற்றும் யார் ஒருவரும் வெளிநாடு செல்ல வேண்டுமென்றால் அரசாங்க அனுமதி பெற்றாக வேண்டும் என விதி இருக்கிறது. படப்பிடிப்பு பணிகளுக்காக வெளிநாடு சென்ற ஏ.எஸ். பிரகாசம் அதற்கான அனுமதியைப் பெற்றாரா?

கல்லூரிக்கு வராத நாட்களுக்குகெல்லாம் விடுப்பு மடல் கொடுத்திருக்கிறாரா? கல்லூரி முதல்வரும் இவருக்கு உடந்தையாக இருக்கிறாரா? என்பன போன்ற பல கேள்விகள் குறித்து அரசு விரைவில் விசாரணை நடத்த வேண்டும் என்று அவருடைய சக ஆசிரியர்களே விரும்புகின்றனர்.

கல்லூரிப் பணியைச் செய்யாவிட்டாலும் வாங்கும் சம்பளத்திற்கு, கருங்காலிப் பணியைச்செய்கிறார் போலிருக்கிறது என்று ஆசிரியர் சமூகம் இவரை விமர்சிக்கிறது.

- கோபக்காரன்

FREE E - BOOKS , www.thamizham.net.,


# கார்டூன் பதில்கள்

1. நெடுஞ்செழியன் இனி என்ன செய்வதாக இருக்கின்றார்?



நன்றி:- இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆப் இந்தியா.

2. கணவனுக்கு முன் எழுந்து வேலைக்குச் செல்லும் மனைவியின் காலை அவசரம் எப்படிப்பட்டது?



நன்றி:- காரவன்



FREE E - BOOKS , www.thamizham.net.,

# யார் அந்த முகமூடித் 'தாமரை'?

போபர்ஸ் பிரச்சனையில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. இந்து ஜாக்களோடு ஏற்பட்ட தொடர்பிலிருந்து பல விஷயங்களை 'இந்து' நாளிதழ் ஆதாரத்தோடு வெளியிட்டது பழைய விஷயம். இப்போது அதிர்ச்சி தரக் கூடிய பல புதிய ஆதாரங்களை வி.பி.சிங் வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள தகவல்கள் உண்மையானவைதானா என்பதை மக்களுக்குச் சொல்லாமல், அரசு நடத்தும் மௌன விளையாட்டு நியாயமானதாக இல்லை.

சுவிஸ் வங்கியில் 'தாமரை'(லோட்டஸ்) என்னும் பெயரில், கமிஷன் தொகையை போபர்ஸ் நிறுவனம் செலுத்தியுள்ளது. அந்த வங்கிக் கணக்கு எண்ணையும் எந்தெந்தத் தேதியில் எவ்வளவு தொகை செலுத்தப்பட்டுள்ளது என்ற கணக்கையும் கூட வி.பி.சிங் தெரிவித்துள்ளார். 'ராஜீவ்' என்னும் சொல்லுக்கு 'தாமரை' என்னும் பொருள் உண்டு என்றும் அவர் கூறியுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. தக்க ஆதாரம் இல்லாமல், பெயர் பொருத்தத்தை மட்டுமே கணக்கில் வைத்துக்கொண்டு, நாம் முடிவெடுத்து விட முடியாது. ஆனாலும் அந்தத் 'தாமரை' தான் இல்லை என்று நிரூபிக்க வேண்டிய கட்டாயம் நம் பிரதமருக்கு உள்ளது.

இந்திய அரசுக்கு இன்னொரு கடமையும் உள்ளது. பிரதமருக்கு, போபர்ஸ் ஊழலில் தொடர்பில்லை என்று மட்டும் சொல்லிவிட்டால் போதாது. தொடர்புள்ள அந்த 'தாமரை' யார் என்றும் அரசு கண்டுபிடித்துச் சொல்லியாக வேண்டும். 'தாமரையின் முகமூடியைக் கிழிக்கத் தயங்கும் ஒவ்வொரு நிமிடமும், அரசின் நாணயம் சந்தேகத்திற்கிடமாகும். 'தாமரை' யாரென்பதை வெளியிடுமாறு போபார்ஸ் நிறுவனத்தை நம் அரசு வலியுறுத்த வேண்டும். வெளியிட மறுத்தால் அந்நிறுவனத்துடன் செய்து கொண்ட வியாபாரத் தொடர்பை ரத்து செய்ய வேண்டும்.

தான் கூறியுள்ள புகார் பொய்யாய்ப் போகுமானால், அரசியலை விட்டே விலகி துறவறம் மேற்கொள்ளத் தயார் என்று வி.பி.சிங் கூறியுள்ளார். இதனை வெறும் அரசியல் ஸ்டண்ட் என்று ஒதுக்கிவிட முடியாது. தன் அரசியல் எதிரியை, துறவறத்துக்குத் துரத்தவும், தன் பரிசுத்தத்தை மெய்ப்பித்துக் காட்டவும், இதைவிட அரிய வாய்ப்பு இனி நம் இளைய பிரதமருக்குக் கிடைக்காது.


– பொதுஜனன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# 20 நிமிட கட்டடங்கள்

கட்டடம் கட்டுவது நாளுக்கு நாள் தலைவலி பிடித்த வேலையாகி வருகிறது. ஏமாற்றும் காண்டிராக்டர்கள், ஒத்துழைக்காத தொழிலாளர், விஷமாக ஏறும் கட்டடப்பொருள்கள், திடீரென கிடைக்காமல் போய் விடும் சாமான்கள் இவற்றோடு அல்லாட வேண்டியிருக்கிறது. இவற்றோடு மழை விடாது பெய்தால் வேலை கெடுகிறது; கடும் வெயில் என்றால் வேலைத்திறன் குறைகிறது.

இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது மேற்கு ஜெர்மன் நிறுவனம் நீஸ்மான். இருபது நிமிடங்களில் கட்டடத்தையே கட்டி முடித்து விடலாம். இதனைக் கட்டிமுடிக்க பெரிய கொத்தனார் கூட்டம் வேண்டாம் இரண்டுபேர் போதும்.



ஒரு வகையான தகடுகளை ஒன்றோடொன்று சரியாகப் பொருத்துவதன் மூலம் கட்டடத்தை அமைத்து விடலாம். சுத்தியலோ, திருப்புளியோ கூடத் தேவையில்லை. வெறும் கைபோதும். திடீர் மருத்துவமனைகள், பொருட்காட்சிகள், அலுவலக அறைகள், ஏன் மாடி அறைகள் கூட இம்முறையில் அமைக்கலாம். 7.5 மீட்டர் உயரமும், 20 மீட்டர் நீளமும் கொண்டு இவ்வறைகளைக் கட்ட முடியும். நம் நாட்டுக்கு இம் முறையை, மலிவாக உடனே கொண்டு வந்தாக வேண்டும்.

- இசு

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சத்தத்தின் ரசிகர்கள்

அன்புள்ள ரேவதிக்கு,

உனக்குக் கடிதம் எழுத உட்காரும்போது, வீதியெல்லாம் ஒரே வெடிச்சத்தமாய் இருக்கிறது. தீபாவளியன்று வெடிச்சத்தம் கேட்பதில் வியப்பென்ன என்றுதானே கேட்கிறாய்? நான் அதைச் சொல்லவில்லை. `சத்தத்தைக் கேட்டுச் சந்தோஷப்படும்' மனோபாவம் எனக்குப் பிடிபடவில்லை என்றுதான் சொல்ல வருகிறேன்.

இசைக் கூடச் சத்தம்தான்! ஆனால் அதில் ஒரு ஒழுங்கும், ஓசைநயமும் மென்மையும் இருக்கிறது. பட்டாசில் என்ன இருக்கிறது - `படார்' என்ற சத்தத்தை தவிர! மத்தாப்பூவிலாவது பொறிப்பொறியாய்க் கொட்டும் அழகிருக்கிறது. புஸ்வானத்திலும், சங்கு சக்கரத்திலும் ரசனைக்குரிய அம்சமிருக்கிறது. ஆனால், நாள் முச்சூடும் கேட்கும் வெடிச்சத்தத்தில் `சத்தம்' மட்டும் தானே இருக்கிறது?

காலியாகிப் போன மண்ணெண்ணை டின்னில் கம்பை வைத்து அடித்துப் பார் - இதே மாதிரிச் சத்தம் வரும். ரசிக்க முடியுமா உன்னால் ? அந்தச் சத்தத்தை டேப் ரெக்கார்டரில் பதிவு செய்து வைத்துக் கொண்டு அவ்வப்போது கேட்க முடியுமா உன்னால்?

ரேவதி, உலகம் முழுவதும் இருந்த அறிஞர்கள் `அமைதியைத் தேடு' என்றுதானே சொல்லியிருக்கிறார்கள்? நாம் மட்டும் ஏன் இப்படி `சத்தத்தின்' ரசிகர்களாகிப் போனோம்?

மனசுக்குள் சத்தம் போட்டு விவாதிக்கிறவன் வெளியில் சத்தம்போடுவதில்லை. வெளியிலிருந்து வரும் சத்தம், உன் மூளை நசித்துப் போவதற்கு மூல காரணமாகிறது!

இதையெல்லாம் வெளியில் சொன்னால், `தீபாவளியை மறுக்கும் நாஸ்திகன்' என்றும், `நரகாசுரனுக்குச் சொந்தக்காரன்' என்றும் சொல்வார்கள். நான் தீபாவளிக்கான புராணக் கதைகளை மறுக்கிறவன்தான் என்பது வேறு விஷயம். ஆனால் இப்போது இந்தச் சத்தங்களுக்காகவே ஒருமுறை தனியாய்ச் சங்கடப் படுகிறேன்.

இந்தச் சத்தங்களை வைத்துப் பார்க்கும்போது, ஆதிவாசிகளுக்கும் நமக்கும் அப்படியொன்றும் வித்தியாசமில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இந்தப் `பட்டாசுக் கலாச்சாரம்' பற்றி உனக்கு என்ன தோன்றுகிறது? பதில் எழுதேன்.

தோழமையுடன்,

பாண்டியன்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஆசாத் புத்தகம் தரும்

சுபாஷ் சந்திர போஸ் இந்தியாவை விட்டு வெளியேறிய பின்,
விடுதலைப் போரில் மீண்டும் வேகம் காட்டத் தொடங்கியது.
தலைவர்களில் ஒருவர் மௌலானா அபுல் கலாம் ஆசாத்,மற்ற 4
ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர். ஆழ்ந்த சிந்தனையும்,
மொழிகளிலும் வல்லவர், இந்திய விடுதலைக்குப் பின் "இந்தியா
எழுதினார். அந்நூலின் 30 பக்கங்களை மட்டும், தான் இறந்து 30
என்று அவர் கூறியிருந்தார். அவர் வேண்டுகோளின் படி 22.02.19
ஆனால், இன்றைய காங்கிரஸ் எம்பியும், ஆசாத்தின் உறவினரு
மாதங்களுக்குப் பிறகு வெளியாகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள

அந்தப் புத்தகத்தில் நேரு, படேல் பற்றி அதிர்ச்சி தரக்கூடிய
நேருவின் பேரனே பிரதமராக இருப்பதும், நேருவின் நாற்றா
பக்கங்களிருந்து, கீழேயுள்ள செய்திகளை, இந்தியா டுடே' வெளி

* 26.04.1946 அன்று, காங்கிரஸ் கட்சியின் தலைவர் ப
கட்சியினர் அவரையே ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்குமாறு
நான் அவ்வாறு செய்தேன் என்றாலும், பிறகு நிகழ்த்தப்
மிகப்பெரிய பிழை என்று எனக்கு உணர்த்துகின்றன. கா
அளவுப் பிழையாகும்.



* 1946 ஆகஸ்டு 16 - கல்கத்தா
காங்கிரஸிற்கும் முஸ்லீம் லீக்கி
எதிர்பார்க்க முடியாதென்பது
ஒரு மிகப் பெரிய துயரமாகும்.
ஜவஹர்லாலையே சாரும் என்ப

* பாகிஸ்தான் பிரிவினையில்
நேரு ஆதரிக்கத் தொடங்கியத
ஆளுமைதான் என்று நான்
எட்வினாவுக்குமிடையே ரகசிய
வதந்திகள் உண்டு)

* மவுண்பேட்டன் துரை இ
பிரிவினைக்கு ஆதரவாகத்தான் இருந்தார். முஸ்லீம் லீக்
அவருக்கிருந்தது. முஸ்லீம் லீகினரிடமிருந்து விடுபட முடியு
இருந்தார். ஆகவே, இந்தியப் பிரிவினைக்கு அடித்தளமி
எந்தவிதத்திலும் தவறானதில்லை.

* உள்துறை அமைச்சர் பதவியை முஸ்லீம் லீகிற்கு க
பிடிவாதத்தால் மறுக்கப்பட்டு, அவர்களுக்கு நிதித்துறை
ஏற்பட்ட சிரமங்களுக்கெல்லாம் காரணமாயிருந்தது.
காங்கிரஸால்தான் என்பது காலத்தின் தீர்ப்பாக இருக்கு

* லண்டனில் உள்ள இந்தியர்கள், கிருஷ்ணமேனனைப்
அவருடைய நடவடிக்கைகள் அணுகுமுறைக்கு ஏற்றனவா
முழுமையாக நம்புவதில்லை. பரந்தபட்ட கருத்தில், அவர்
வேண்டும் என்ற அக்கறையில்லாதவராகவுமே இருந்தார்
கொண்டவர்களாகவே இருந்தனர்; ஒட்டுமொத்தமாய் நே

FREE E - BOOKS , www.thamizham.net.,

## திர்ச்சி வரலாறு




***940 களின் தொடக்கத்தில் காங்கிரஸ் கட்சி,
ப்போது முன்னணியில் இருந்த ஐம்பெரும்
லைவர்களான காந்தி, நேரு, படேல், ஜின்னா
ரந்த படிப்பும் உடையவர். அரபி, உருது
ந்திரம் வென்றது" என்னும் நூலை ஆசாத்
ண்டுகளுக்குப் பின்தான் திறக்க வேண்டும்
அன்று அப்பக்கங்கள் மக்களின் பார்வைக்கு வந்திருக்க வேண்டும்.
ான நஜூமா ஹெப்துல்லா தொடர்ந்த வழக்கின் காரணமாக, பத்து***

***லை விஷயங்கள் உள்ளன. அந்தப் பக்கங்கள் வெளியாகும் நேரத்தில்
டு விழா தொடங்கியிருப்பதும் சுவையான முரண்பாடுகள். அந்தப்
ட்டுள்ளது."–***

விக்கு ஜவஹர்லால் பெயரை முன் மொழிந்தும், காங்கிரஸ்
ஓர் அறிக்கை வெளியிட்டேன். ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்பே
ற்ற செயல்கள், இதுவே என் அரசியல் வாழ்வில் நான் செய்த
ஜியின் வார்த்தைகளில் சொல்வதெனில், அது ஓர் இமாலய

ற்கு மட்டுமன்று; முழு இந்தியாவிற்கும் ஒரு கறுப்பு நாளாகும்.
கும் இடையே ஒப்பந்தத்தின் மூலம் அமைதியான தீர்வை
ன்று ஏறத்தாழ முடிவாகி விட்டது. இது இந்திய வரலாற்றில்
ந்த மோசமான வளர்ச்சிக்கான பெரும்பான்மைப் பொறுப்பு
த ஆழ்ந்த துயரோடு நான் சொல்லித்தான் ஆக வேண்டும்.
நேருவின் மனமாற்றத்திற்கு (ஒரு நிலையில் பிரிவினையை
) ஒரு முக்கியமான காரணம் எட்வினா மவுண்பேட்டனின்
நினைக்கிறேன். (நேருவுக்கும் மவுண்பாட்டனின் மனைவி
தொடர்புகள் இருந்தனவென்று, நேருவின் காலத்திலேயே

ந்தியா வருவதற்கு முன்பே, சர்தார்படேல், ஐம்பது சதம்,
ம்கோடு இணைந்து பணியாற்ற முடியாது என்ற கொள்கை
னில், அவர் இந்தியாவைப் பங்கிட்டுக் கொள்ளத் தயாராகவே
வர் வல்லபாய் படேல்தான் என்று கூறுவது, உறுதியாக,

டுக்கலாம் என்னும் வேவல் துரையின் யோசனை, படேலின்
ங்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. இதுதான் பின்னால்
வே இந்தியா பிளவுபட்டது முஸ்லீம் லீகினால் அன்று

ற்றிய முடிவில், இருவேறு கருத்துடைவர்களாக இருந்தனர்.
இல்லை என்பதே பொதுவான அபிப்பராயம். நான் அவரை
ம்பத்தகாதவராகவும், பொது நிதியை எவ்வாறு செலவழிக்க
மிகப்பலர் அவரைப் பற்றி இன்னும் மோசமான கருத்துக்
மையில்லாதவர் என்றே கருதினர்.

–சுபவீ

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

* ஜனரஞ்சக பத்திரிகைகள் எல்லாம் விளம்பர வருமானம் போய்விடும் என்ற சுயநலத்துடன் காம்ப்ளான் - ஃப்ருட்டி போன்ற விவகாரங்களை வெளியிடாத போது, தாங்கள் துணிந்து வெளியிட்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது

-லேனாவாணன் , ஐதராபாத்

* ஓர் இதயமான மனிதரை என்னமாய் உலுக்கி விட்டிருக்கிறீர்கள்

- திருமதி. சுகந்தி நாராயண், மதுரை

* வஞ்சனையாலும், பொய்மையாலும் பின்னி பிணைக்கப்பட்டுள்ள ஆடம்பரம் கலந்த பெரிய நகரின் ஒரு அங்கமாக இருக்கும் பர்மா பஜாரைப் பற்றிய கட்டுரை, விழலுக்கு இரைத்த நீர்!

- லேனா தாசன், முருங்கப்பேட்டை

* ஈழத்தமிழனின் வீரப்பரணிபாடும் 'சின்னப்பயலே' சிறப்பாக இருந்தது. எழுதியவர் யாரோ?

- எம். பஷீர், ஐதராபாத்

* சென்னை கோட்டூர்புரங்கள் நீரில் மூழ்கும் காரணத்தைத் தெள்ளத் தெளிவாக விளக்கிய உமது சுட்டு விரலுக்கு எமது பாராட்டுக்கள்.

- வி. பழனிச்சாமி, கருப்பன்பட்டி

* நம் சுட்டியின் ஆரம்பகால 'பத்திரிகை விமர்சனம்' மீண்டும் தொடருமா? தற்போது புற்றீசல் போல் பெருகி வரும் இவ்வியாபாரம் மிகவும் மனவேதனை தருகிறது. இதை விமர்சித்து ஓரளவு ஆறுதல் கொள்ளும் நோக்கிலேயே இக்கேள்வி கேட்கப்படுள்ளது.

- ச. பாலாஜி கிருஷ்ணன், தூத்துக்குடி

* அட்டைப் படக் கருத்து, படபதில்கள் சிந்திக்க வைத்தன, நண்டின் வயிற்றுக்குள் குழந்தை திகைக்க வைத்தது.

- வீர அருள்நாதன், பொதக்குடி


* வசிகரனின் குறுநாடகம் நாட்டில் இன்று நடக்கும் கள்ள ஓட்டுப் பெருக்கத்தை ஊருக்குத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. அருமையான நாடகம்

- எல். எஸ். இ. பழனிப்பன், வாய்மேடு

FREE E - BOOKS , www.thamizham.net.,

# விண்வெளி மனிதர்களுடன் தொடர்பு முயற்சி

பிற கோள்களில் நம்மைப் போன்ற ஜீவிகள் இருப்பதும், அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதும் சாத்தியமா?



A message from earth on Pioneer II spacecraft

அண்மையில் பெங்களூரில் நடைபெற்ற அனைத்துலக விண்வெளியியல் காங்கிரசில் விண்வெளி மனிதர்களைத் தேடுதல் தொடர்பான ஒப்பந்த அறிக்கையே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி விண்வெளியின் பிற இடங்களில் அறிவுஜீவிகள் இருக்கின்றனவா என்ற தேடலில் ஈடுபடும் நாடுகளில் இந்தியாவும் சேர்ந்துள்ளது.

பூனேயில் அமையவிருக்கும் மிகப்பெரும் வானொலி தொலை நோக்கி இந்தியாவின் இந்த விண்மனிதத் தேடலுக்குப் பொருத்த மானதாக அமையும் என்று கூறப்படுகிறது.

விண்வெளியில் அறிவு ஜீவிகள் இருக்கக்கூடும் என்று நம்புகின்ற கோடிக்கணக்கானவர்களில் அமெரிக்க மின்னாள் அதிபர் ரீகனும், சோவியத் தலைவர் கோர்பசேவும் அடங்குவர். 50% அமெரிக்க வயது வந்தோர் விண்வெளி உயிர்களை நம்புவதாக சென்ற ஆண்டு எடுத்த புள்ளி விவரம் கூறுகிறது.

அமெரிக்காவின் வாயேஜர் 10, 11, பயனீர் 1, 2 ஆகிய 4 விண்கலங்களிலும், பிற அறிவு ஜீவிகளுடன் தொடர்பு கொள்ளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவை நம் சூரிய அண்ட வெளியைக் கடந்து இன்னும் வெட்ட வெளியில் முடிவில்லாமல் சென்று கொண்டிருக்கின்றன.

படத்தில் காட்டப்பட்டுள்ளது போல ஒரு தகடு பயனீர் 2 இல் வைக்கப்பட்டுள்ளது. நம்மைப் பற்றி விளக்கும் இந்த வரைபடத்தை அறிவார்ந்த ஜீவிகள் புரிந்து கொள்ள முடியும். இதைத் தவிர 54 உலக மொழிகளில், (தமிழ் உட்பட) நம் உலகைப் பற்றிய எல்லா முக்கிய விபரங்களையும், நம் தொடர்பு கொள்ளும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தி பொதித்து வைக்கப்பட்டுள்ளன. பறவை மிருகங்களின் ஒலிகளும், பிற கோள்களின் தொடர்பின்றி, நாம் தன்னந்தனியாக அண்டவெளியில் இருக்கும் தனிமை ஏக்கத்தை வெளிப்படுத்தும் சாஸ்திரிய இசையும் இதில் உண்டு.

இதுவரை பதில் கிடைக்கவில்லை.

-உலகப்பன்

ஆசிரியர் : கு. நாராயணபாரதி. வெளியிடுபவர் : இ. இராமச்சந்திரன். அச்சிடுபவர் : எம். எஸ். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை - 600 005. முகவரி 1494, அண்ணாநகர், சென்னை - 600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுட்டிக் குட்டிக் கவிதைகள்






திருடர்களின்
கையிலே
விசில்



மனமுறிவிற்கு
ஏது
மாவுக்கட்டு

### சுதந்திரம்

இந்தியாவில் வியாபரம் செய்ய
வந்தவர்களிடமிருந்து
இந்தியாவை வியாபாரம் செய்ய
வந்தவர்கள் பெற்றது.

### முதலாளிகள்

'உலக முதலாளிகளே ஒன்று
சேருங்கள்' என்ற அழைப்பின்றியே
ஒற்றுமையாக இருப்பவர்கள்.

### தேச பக்தி

வேறு
ஏதாவது
ஒரு
தேசத்தின் மீது

— பு.கே. செங்கோட்டையன்

மந்திரி
ஊர் திரும்பினார்!
'மாஜீ' யானதால்

கை விலங்குகள்
களையப்பட்டன!
-நாளை தேர்தல்

வளைந்தமுதுகு
நிமிர்ந்தது
சவமானபின்பு

— இராஜாதி

## சுட்டி முன் இதழ்கள்

இதழ் எண் 72 முதல் முன் இதழ்களைப் பெற, இதழுக்கு 50 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O.) அனுப்பினால், உடனே அஞ்சலில் வந்து சேரும்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# நிலவில் சி.வி. ராமன்

* சர். சி. வி. ராமன் ஒளியைப்பற்றி ஆய்வு மேற்கொள்வதற்கு முன் ஒலியைப் பற்றியும் ஆய்ந்தார். மிருதங்கம், தபலா, வீணை பிற நரம்பு இசைக் கருவிகளைப்பற்றிய ஒலிக் கூறுகளை நுட்பமாக ஆய்ந்திருக்கிறார். மலர்களின் வண்ணம், வண்ணத்துப் பூச்சி, படிகம் ஆகியவை இவரை மிகவும் கவர்ந்தன. கண்டுபிடிப்புகளை, நோக்கி சிந்திக்க வைத்தன.



* இவருக்கு சர் பட்டம் கிடைத்தவுடன் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் அவரைச் சிறப்பிக்க ஒரு விருந்து நடத்தினர். அதில் மது வழங்கப்பட்டபோது ராமன் ஏற்க மறுத்து விட்டார். 'மது குடித்தால் உடலில் என்ன விளைவு ஏற்படுகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?' என்று விஞ்ஞானிகள் வற்புறுத்தியதற்கு, 'ராமன் விளைவுகளைப் பற்றித் தான் நீங்கள் ஆய்வு செய்ய வேண்டுமே தவிர, மது இராமனிடம் என்ன விளைவு ஏற்படுத்துகிறது என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டாம்' என்றார்.

* ஆம்ஸ்டர்டாமின் புகழ்பெற்ற கமர்லிங் ஒன் சோதனைச் சாலையின் இயக்குநர் பதவியை அவருக்கு வழங்க முன் வந்தபோது, 'என் பணி இந்தியாவில் தான். வெளிநாட்டில் அல்ல' என்று மறுத்து விட்டார்.

* இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவர் (பிரசிடென்ட்ஷிப்) பதவி அவருக்கு வழங்கப் பட்டபோது அவர் மறுத்துவிட்டார். 'இந்த "ஷிப்பை" வைத்துக் கொண்டு நான் என்ன செய்ய முடியும்' என்றார்.

* வல்லரசுகள் விண்வெளி ஆய்வில் மிகுந்த அறிவையும், செல்வத்தையும், முயற்சியையும் செலவிடுவது அவருக்கு எரிச்சல் மூட்டியது. இந்த நிலவுலகத்தில் ஆயவேண்டியவை ஏராளமாக இருக்கும்போது, வெறும் கௌரவத்திற்காக நாடுகள், அறிவியலைக் கொச்சைப் படுத்துவதை வெறுத்தார். இச்செயல் முட்டாள் தனமானதும், அறிவுப் பூர்வமற்றதுமாகும் என்று கண்டித்தார்.

* எனினும் அறிவியல் உலகம் நிலவின் தூரப்பகுதியில் உள்ள ஒரு பள்ளப்பகுதிக்கு இராமனின் பெயரைச் சூட்டி அவரை, கௌரவித்துள்ளது.

- இசு

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இரண்டாவது பணக்கார நாடு: இந்தியா

'இந்தியா உலகின் பணக்கார நாடுகளின் ஒன்று' என்று சொன்னால் அடிக்க வராதீர்கள். உண்மையைத்தான் சொல்கிறோம். தனி நபர் வருமானத்தை வைத்துப் பார்த்தால் உலகின் மிக ஏழ்மையான 20 நாடுகளில் இந்தியாவும் ஒன்றுதான். ஆனால் தங்கத்தை அளவு கோலாக வைத்து மதிப்பிட்டால் இந்தியா 2-வது பணக்கார நாடாக விளங்குகிறது. குடிப்பது கூழ்! கொப்பளிப்பது பன்னீர்!

உலகில் உள்ள எல்லா நாடுகளின் (சோஷலிச நாடுகள் தவிர) அரசு கஜானாக்களில் உள்ள மொத்தத் தங்கத்தின் இருப்பு சுமார் 32,000 டன்தான். இந்தியாவில் உள்ள தங்கம் மட்டும் 7000 டன். முதல் நிலையில் இருக்கும் அமெரிக்காவின் இருப்பு 8000 டன். ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய இடங்களில் உள்ள 75 எண்ணெய் வளமற்ற வளரும் நாடுகளின் மொத்தத் தங்கக் கையிருப்பே 3200 டன்னுக்கும் குறைவு தான். இந்தியாவின் கஜானா கையிருப்பும் இதற்குள்தான் அடக்கம். அப்படியானால் இந்தியாவின் பெரும்பாலான தங்கம் தனியார் கைகளில் இருக்கிறது என்றாகிறது. தனியார் கைகளில் இருக்கும் அளவு சுமார் 6000 டன்.

இன்றைய விலையின்படி (கிராம் ரூ 300) தனியாரிடம் உள்ள 6000 டன் தங்கத்தின் மதிப்பு 1,80,000 கோடி ரூபாய் ஆகிறது. அப்பாடா! கடந்த 32 ஆண்டுகளாக இந்திய அரசு பொதுத் துறையில் முதலீடு செய்துள்ள தொகையே 1,20,000 கோடி ரூபாய் தானே! 80 கோடி இந்தியர்க்கும் தங்கத்தைப் பங்கிட்டால் தனிநபர் வருமானம் ரூ 2,250 வருமே!

நமது 160 மில்லியன் வீடுகளில் சுமார் 40-50 மில்லியன் வீடுகளில் தங்கம் உறங்குகிறது. இதைத்தவிர பழைய மகாராஜாக்கள், ஜமீன்தார்கள், பெரிய வியாபாரிகள், சினிமாகாரர்கள், கடத்தல்காரர்கள் போன்றோர் கறுப்புப் பணத்தைத் தங்கமாக மாற்றி வைத்திருப்பது பெரிய அளவில் உள்ளது. இன்னொரு பெரும்பகுதித் தங்கம் - கோவில்களில் - சிறப்பாக தென்னிந்தியக் கோவில்களில் முடங்கிக் கிடக்கிறது.

தங்கத்தைத் தனியாரிடமிருந்து பறித்தால் நாட்டைப் பொன்னாக்கலாம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு:

ஒருவருக்கு முழு நேர வேலை வாய்ப்பை நல்க ஒரு தொழிற்சாலை தலைக்கு ரூ 1 லட்சம் முதலீடு செய்ய வேண்டும். அப்படியானால் தனியாரிடம் இருக்கும் தங்கத்தைத் தொழிற்சாலைகளில் முதலீடு செய்தால் 180 லட்சம் பேருக்கு வேலை தரமுடியும். இந்தியாவில் வேலையில்லாதோர் தொகை இதற்கு மேல் இல்லை.

- அஞ்ஞானி



FREE E - BOOKS , www.thamizham.net.,

புத்தகப் பிழிவு

# சூழலியல் ஓர் அறிமுகம்

(Ecology for Beginners என்ற நூலைத் தழுவி நெடுஞ்செழியன் மற்றும் மூவரால் உருவாக்கப்பட்டது. வெளியீடு: "பூவுலகின் நண்பர்கள்" 360/6, பெல்லி ஏரியா, அண்ணா நகர், சென்னை - 600 040 விலை ரூ. 4.00)

சூழலியல் என்பது இந்தப் பூமியிலுள்ள எல்லாவற்றையும் பற்றிய கதையாகும்.

மனித வரலாற்றில் கிட்டத்தட்ட 99% காலம் வரை அவன் வேட்டையாடி காடுகளை அழித்து மீன் பிடித்தே காலம் தள்ளினான், மீதமுள்ள 1% வரலாறு இனி ஆரம்பம்.

இயற்கையை, மனித நுகர்விற்கான ஒரு சாதனமாகக் கருதுவது அழிவிற்கான அடிப்படை. சூழலமைப்பு சேதப்படாமல் இருக்கும் மட்டுமே பூமியில் உயிர் வாழ்க்கை சாத்தியம்.

மனிதன் இல்லாமல் சூழலமைப்பு இயங்கும். ஆனால் சூழலமைப்பு இல்லாமல் மனிதன் உயிர்வாழ்வே முடியாது என்பதை மனித இனம் மறந்து கொண்டிருக்கிறது.

ஆதி சமூகத்தில் மனிதன் உபயோகித்து வந்த பொருட்களில் 80% விலங்குகள் சாம்ராஜ்ஜியத்திலிருந்தும் கனிமங்களிலிருந்தும் கிடைத்து வந்தன. தொழிற்புரட்சி இதைத் தலைகீழாக திருப்பி வைத்து அழகு பார்த்தது. புதுப்பிக்க இயலாத சக்திகள் மிகையாக உபயோகப்படுத்தப்பட்டு கரைக்கப்பட்டன. பூமி சல்லடைக் கண்ணாகத் துளைக்கப்பட்டது. வளப்படுகை பிழிந்து எடுக்கப்பட்டது. மனிதகுலம் இயற்கையின் வட்டியில் வாழ முற்படாமல் மூலதனத்திலேயே கைவைக்கத் துவங்கியது. இது மடியையே வெட்ட முனைந்த கதைதான்.

வளர்ந்த உயிருள்ள மரங்களை வெட்டி உபயோகித்துத் தீர்த்த பின்பும் பசியடங்காத முதலாளித்துவம் மக்கிப்போன மரங்களையும் தோண்டி எடுத்தது. அது தான் கறுப்பு வைரம் - நிலக்கரி!

சூழலியலின் எதிரியான முதலாளித்துவம் தனது நன்மைக்காக மக்களின் நுகர்வு, ரசனையை வெகுவாக மாற்றி உள்ளது. இப்போது நடைமுறையில் இருக்கும் பொருள்களில் பெரும்பான்மையானவை தேவையற்றனவாகவும் சுற்றுச் சூழலுக்குத் தீங்கு விளைவிப்பனவாகவும் உள்ளன. முதலாளித்துவத்தின் உற்பத்தி முறைகளைக் கடைப்பிடிக்கும் இன்றைய சோசலிசமும் சூழலிலுக்கு நண்பனாக இல்லையெனினும் சூழலியலில் வளர்ச்சிக்கு ஏற்றது சோசலிச சூழ்நிலைதான்

பூமியில் இன்று வாழ்ந்து வரும் மனித இனத்திற்கு, வரப்போகும் தலைமுறைக்கு இதைப் பாதுகாத்து அளிக்க வேண்டிய கடமை உள்ளது. இதன் தற்காலிக உபயோகிப்பாளர்கள் நாம். இதற்குச் சிறு தீங்கு கூட விளைவிக்க இன்று வாழந்து வரும் மனித இனத்திற்கு உரிமை கிடையாது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பீகாரின் பரிதாபங்கள்

இருபது ஆண்டுகளாய்த் தமிழ்நாட்டை, இருள் கவ்வியிருப்பதாய்ச் சொல்லும் காங்கிரஸ் கட்சியினரின் ஆட்சியில், பீகாரில், என்ன வெளிச்சம், பரவியிருக்கிறது என்று பார்த்தால் வேதனைதான் மிஞ்சுகிறது. இந்தியாவிலேயே படித்தவர்கள் மிகக் குறைவாக உள்ள மாநிலங்களில் அதுவும் ஒன்று! இன்னும் அடிப்படைத் தேவைகள் கூடக் கிடைக்காத நிலையில் அங்கு மக்கள் வாழ்கின்றனர்.

இயற்கையின் சீற்றத்திற்கும் அம் மக்கள் அண்மையில் ஆளாகியுள்ளனர். கடந்த ஆகஸ்டு மாதம் 21 ஆம் தேதி ஏற்பட்ட நிலநடுக்கத்தால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீடுகளையும், உடைமைகளையும் இழந்துள்ளனர்.



இ. காங்கிரஸ் முதல்வர் பகவத்ஜா ஆசாத் சரியான நிவாரணப் பணிகளைச் செய்யவில்லை என்றும் மத்திய அரசிடமிருந்து பெற்ற நிதி, உரியவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்றும், காங்கிரஸ் கட்சித் தொண்டர்களே போர்க்கொடி தூக்கியுள்ளனர். பீகார் மாநிலத்தின் முன்னாள் முதல்வரும், தற்போதைய காங்கிரஸ் எம்.பியுமான ஜகந்நாத் மிஸ்ரா தான் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியுள்ளார். இது வெறும் உட்கட்சிப் பூசல் என்றும், முதல்வராக விரும்பும் மிஸ்ராவின் வேலை என்றும் ஆசாத்தின் ஆதரவாளர்கள் கூறுகின்றர். முதலமைச்சர் ஆசாத், "நாங்களா நிலநடுக்கத்தை உருவாக்கினோம். ஏன் எங்களைக் குற்றம் சாட்டுகின்றீர்கள்?" என்று 'அறிவுப்பூர்வமாக' வினா எழுப்பியுள்ளார். நம் பிரதம மந்திரி ராஜீவ் காந்தியோ, "நான் மீண்டும் பீகார் வருகிறேன். அதுவரை பொறுமையாக இருங்கள்" என்று சமாதானம் செய்கிறார். ஆனால் மாதம் இரண்டு முறை தமிழகம் வந்து செல்லும் அவருக்கு, மீண்டும் ஒரு முறை பீகார் செல்ல நேரமில்லை.

இத்தனை அரசியல் சதிராட்டங்களுக்குமிடையில், பீகார் மாநில ஏழை மக்கள் வீடு, வாசல் எதுவுமில்லாமல் இன்னமும் அநாதைகளாய்த் தெருவில் நிற்கிறார்கள்.

– பாமரன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## நமது எளிய மருத்துவம் - 5

(மத்திய அரசின் ஆயுர் வேத சித்த மைய ஆராய்ச்சிக் கழகத்தின் அதிகாரப்பூர்வமான குறிப்புகள் இவை)

### காதுவலி

**அறிகுறிகள்:** காதில் அதிக வலி, உச்சிமுதல் பின் தலை வரை ஓடி வலித்தல், காது மந்தம், இரைச்சல், சீழ்வடிதல் சில சமயம் சுரம் காணல்

**மருந்து** 1. பூண்டு இரசத்தைக் காதில் விடுதல்
2. திருநீற்றுப்பச்சையிலைச் சாற்றைக் காதில் விடுதல்

### விரைவீக்கம்

**அறிகுறிகள்:** விரையில் வலி, வீக்கம், விரை சிவந்து காணப்படுதல். இது பெரும்பாலும் நோய்கிருமிகளாலும் அல்லது விரையில் அடிபடுவதாலும் ஏற்படும். சில வேளை சுரம் ஏற்படும்

**மருந்து** : 1. சுக்கு, களிப்பாக்கு, முட்டை வெண்கரு இவைகளை அரைத்து வீக்கத்தில் பற்றிடவும்
2. சோற்று உப்பை முட்டை வெண்கரு கலந்து அரைத்துப் பற்றிடவும்

### கட்டிகள் (சீழ் கட்டிய வீக்கம்)

**அறிகுறிகள்:** வலி, சுரம், சீழ் உண்டாதல்

**மருந்து:** மஞ்சள் அல்லது தேனுடன் சுண்ணாம்பு கலந்து கட்டியில் பற்றுப் போடுக

### வெண்குட்டம்

**அறிகுறிகள்:** உடம்பில் இயற்கை நிறம் மாறி வெண்மையான படைகள் போன்று காணப்படும்.

**மருந்து** 1. கார்போக அரிசியைக் காடியில் அரைத்துப் பாதிக்கப்பட்ட பகுதியில் தடவி இளம் வெயிலில் காட்டவும்
2. பீதரோகிணியைத் தேனில் குழைத்துப் பூசி வரவும்

### செரியாமை

**அறிகுறிகள்:** உண்ட உணவு செரியாமை, வயிறு ஊதல், புளித்த ஏப்பம், சில நேரங்களில் வயிறு கழிதல், வயிற்று வலி.

**மருந்து**: சுக்கு மிளகு ஏலம் சீரகம் இவற்றைச் சமஅளவு பொடித்துத் தேனில் கலந்து மூன்று வேளை 500 மி.கிராம் வீதம் உட்கொள்க.

தொகுப்பு: சித்தன்



FREE E - BOOKS , www.thamizham.net.,

காமிரா கண்களில் சமூகத்தைத் தேடும்

## புகைப்படப்போட்டி

முதல் பரிசு: ரூ 100

இரண்டாம் பரிசு: ரூ 25




தேர்ந்து வெளியிடப்படும் அனைத்துப் புகைப்படங்களுக்கும் இரண்டாம் பரிசு உண்டு.

விதிகள்: • புகைப்படங்கள் சமூகப் பார்வையுடையதாக அமைய வேண்டும். • கருப்பு வெள்ளைப்படமாக,குறைந்தது அஞ்சலட்டை அளவு இருக்க வேண்டும். • இப்போட்டி சுட்டி வாசகர்களுக்கு மட்டுமே. எனவே பக்கத்தில் உள்ள சுட்டி வாசகர் வில்லையை வெட்டியிணைத்து அனுப்புதல் அவசியம். • ஒருவர் எத்தனை புகைப்படங்களும் அனுப்பலாம். ஒவ்வொரு புகைப்படத்துடனும் வெட்டிணைப்பு அவசியம். • கிடைக்க வேண்டிய இறுதி நாள்: 31-12-88. • பிப்ரவரி 89 இதழில் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும். • உறைமேல் 'சுட்டி புகைப்படப் போட்டி' எனக் குறிப்பிடுங்கள்.

**இரு மாதங்களுக்கு ஒரு முறை புதுப்புது சுட்டி வாசகர் போட்டிகளை எதிர்பாருங்கள்! அடுத்த போட்டி அறிவிப்பு: 1-1-89 இதழில்**

## சுட்டி சந்தா

12 இதழ்களை அஞ்சலில் பெற ரூ. 10 பணவிடை (M.O.) செய்யுங்கள். ஒவ்வொரு இதழையும் தவறாமல் பெற சந்தாதாரராவதே சரியான வழி. முகவரி: சுட்டி: AP-638, H பிளாக், அண்ணா நகர், சென்னை - 600 040.

## சுட்டி இல்வசம்

நீங்கள் பெற்ற பயனை உங்கள் நண்பர்களும் பெறட்டுமே! சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக்கூடிய புதியவர்கள் முகவரிகள் எவ்வளவு வேண்டுமாயினும் அனுப்புங்கள். உங்கள் சார்பில் அவர்களுக்கு ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# அமெரிக்காவில் கைநாட்டுப்பேர்வழிகள்

அறிவுஜீவிகளின் மோட்சமாக அமெரிக்காவை நினைத்து நம்மைப்போன்ற ஏழைநாடுகளில் தான் அறியாமை தலைவிரித்தாடுகிறது என்று எண்ணி வெட்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

உண்மை மாறுபாடானது; இன்று அமெரிக்காவில் சுமார் $2^1/_2$ கோடி பேர்கள் எழுத்தறிவற்றவர்கள் என்ற திகைப்பான செய்தி கிடைத்துள்ளது.

அதாவது 25 கோடி அமெரிக்க மக்களில் 10% மக்கள் கைநாட்டுப் பேர்வழிகள்.

தனியாரும் அரசும் கோடிக்கான டாலர்களைச் செலவழித்து அறியாமையை விரட்ட அங்கு பாடுபட்டும் நிலைமை ஓரளவே திருந்தியுள்ளது.

இன்னும் கோடிக்கணக்கான படிக்காத மக்களை வைத்துக் கொண்டு அடுத்த நூற்றாண்டைச் சந்திப்பது அமெரிக்காவிற்காக மிகவும் பிரச்சனையாகும். உடல் உழைப்பு மட்டுமே தேவைப்படும் தொழிலாளர்கள் இனி அமெரிக்காவிற்குத் தேவையில்லை. கம்ப்யூட்டர்களும், எந்திர மனிதர்களும் மனித உடல் உழைப்பை ஏற்றுக்கொண்டு விட்டன. எல்லா உழைப்பாளர்களும் இனி மூளை உழைப்பாளர்களாகவே மாறிப்போகும் சமுதாயம் அங்கு வரப்போவது அந்நாட்டின் எதிர்கால அதிர்ச்சியாகும்.

கி.பி. 2000 இல் அமெரிக்கத் தொழிலாளர்களில் 80% பேர்கள் நன்கு கற்றவர்களாக இருந்தாலொழிய நிலைமையைச் சமாளிக்க முடியாது! இதற்கு தன்னைத் தயாரிக்க, 2 1/2 கோடி கல்லாதோர் நிறைந்த அமெரிக்கா திணறிக் கொண்டிருக்கிறது. - அஞ்ஞானி


---

சுட்டி தொடர்பு முகவரி

A P - 638, H பிளாக், அண்ணா நகர்,

சென்னை - 600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,




http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL)

FREE E - BOOKS , www.thamizham.net